# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ●திருவள்ளுவர் ஆண்டு 2052 ● அக்டோபர் 25, 2021 Weekly E-paper ● October 25, 2021



## ஒப்பீட்டைத் தவிர்க்க முடியவில்லை!

சுப. வீரபாண்டியன்

## இலக்கியத்தில் மலரட்டும் அரசியலில் உதிரட்டும் !

எழில்.இளங்கோவன்

## சமூகநீதி நாயகன் ஸ்டாலின்

தலையங்கம்

## ஆறு நூல்களின் அறிமுக விழா!

கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ●திருவள்ளுவர் ஆண்டு 2052 ● அக்டோபர் 25, 2021

Weekly E-paper ● October 25, 2021

# ஒப்பீட்டைத் தவிர்க்க முடியவில்லை!

**சுப. வீரபாண்டியன்**

*நாளை (அக்டோபர் 26) முதல் வடகிழக்குப் பருவ மழை தொடங்கும் என்ற அறிவிப்பும். நாளை காலை தலைமைச் செயலகத்தில், அது குறித்து மாவட்ட ஆட்சியர்களுடன் முதல்வர் கலந்துரையாடுகின்றார் என்ற செய்தியும் இன்று நாளேடுகளில் ஒன்றாகவே வந்துள்ளன.*

*இந்த அறிவிப்புகள், 2015இல் என்ன நடந்தது என்று எண்ணிப்பார்க்கச் சொல்கிறது. ஜெயலலிதா ஆட்சியைக் குறை கூறுவது நம் நோக்கமில்லை. ஆனாலும் ஒப்பீட்டைத் தவிர்க்க முடியவில்லை.*

**“மழை பொழிவது தெரிவதில்லை**
**மாளிகை வாசலிலே - அது**
**வருமுன்னாலே தெரிந்துவிடும்**
**ஏழை குடிசையிலே “**

*என்பது பட்டுக்கோட்டையாரின் பழைய பாடல் வரிகள்!*

*2015 ஆம் ஆண்டு வெள்ளம் வந்ததே ஜெயலலிதாவின் ஆடம்பர மாளிகைக்குள் தெரியவில்லை. செம்பரம்பாக்கம் ஏரி நிறைந்து விட்டது. ஆனால் அதிகாரிகளால் அன்றைய முதலமைச்சர் ஜெயலலிதாவைத் தொடர்பு கொள்ள முடியவில்லை. டிசம்பர் முதல் வாரத்தில் செம்பரம்பாக்கம் ஏரி உடையும் நிலைக்கு வந்துவிட்டது. சிங்கப்பெருமாள் கோயில் ஏரி உடைந்தே விட்டது. திருப்பெரும்புதூர் வெள்ளத்தில் மிதக்கத் தொடங்கியது.*

*என்ன நடந்து என்ன பயன்? முதல்வரை யாராலும் தொடர்பு கொள்ள இயலவில்லை.*

*சென்னை, சைதை, மறைமலையடிகள் பாலத்திற்கு மேல் தண்ணீர் ஓடிய காட்சியை அன்றுதான் முதன்முதலாக மக்கள் கண்டனர். ஆனாலும் ஜெயலலிதாவைக் காண முடியவில்லை. ஆற்று வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டன குடிசைகள். உயிர்ப்பலி எண்ணிக்கை கூடிக்கொண்டே இருந்தது.*

*எல்லாம் முடிந்துபோன பின் ஜெயலலிதா வெள்ளம் வந்ததை அறிந்து கொண்டார். ஒரே நாளில் 60 செ .மீ. மழை பெய்ததால் வெள்ளத்தைத் தடுக்க முடியவில்லை என்று கூறி, ஒன்றிய அரசிடம் 25,912 கோடி நிதி வேண்டும் என்று கேட்டார். அவர்கள் வழக்கம்போல் கொடுக்கவில்லை.*

*இதுதான் கடந்தகாலச் சரித்திரம்.*

*இப்போது தளபதி மாண்புமிகு முதல்வராக இருக்கும் இந்நேரத்தில், மழை வருவதற்கு முன்பே, நிவாரணப் பணிகள் திட்டமிடப்படுகின்றன.*

*இவர்தான் மக்கள் முதல்வர்! இதுதான் ‘உண்மையான’ திராவிட மாடல்’ ஆட்சி!!*

●



**உண்மையாய் இருப்போம்!**
**உண்மையாய் உழைப்போம்!!**

திராவிட இயக்கம் எதற்காய்ப் பிறந்தது?
சமூக நீதி காத்திட எழுந்தது!

கடந்த பத்தாண்டுகளில் சமூக நீதி...?
காய்ச்சலில் கிடப்பதாய்க் காதில் விழுந்தது!

நோய்கள் தீர மருத்துவம் உண்டா?
தாய்போல் எங்கள் தளபதி உண்டு!

மண்ணில் சமத்துவம் மலர்ந்திட எதுவழி?
கண்காணிக்கக் குழுஒன்று வேண்டும்!

குழுவில் செயல்பட எத்தனை பேர்உளர்?
எழுவர் எங்களை இயங்கிடப் பணித்தார்!

பதவி கிடைத்த பரவசம் அடங்கிற்றா?
பொறுப்பை நிறைவேற்றும் கவலையே தொடங்கிற்று!

முதல்வருக்கு ஏதும் செய்திகள் உண்டா?
உண்மையாய் இருப்போம் உண்மையாய் உழைப்போம்
அன்பும் நன்றியும் என்றும் மறவோம்!

பேராசிரியர்
**சுப.வீரபாண்டியன்**



நன்றி: முரசொலி

# இலக்கியத்தில் மலரட்டும் அரசியலில் உதிரட்டும்!

## எழில்.இளங்கோவன்

இந்தியா - பாகிஸ்தான் பிரிவினைக்கு ஜவகர்லால் நேருவும், முகமத்அலி ஜின்னாவும் ஒருமித்த கருத்தில் இருக்கிறார்கள். நவகாளியில் இந்து - முஸ்லிம் கலவரம். இதில் முஸ்லிம்களுக்கு ஆதரவாகப் பேசுகிறார் மோகன்தாஸ் கரம்சந்த் காந்தி போன்ற காரணங்களால் 1948ஆம் ஆண்டு ஜனவரி 30 ஆம் நாள் மகாத்மா காந்தியை ஆர்.எஸ். எஸ். அமைப்பின் தீவிர உறுப்பினர் நாதுராம் கோட்சே சுட்டுக் கொன்று விடுகிறான்.

இதற்கான விளக்கத்தை அதே ஆண்டு பிப்ரவரி 4ஆம் நாள் அன்றைய இந்திய அரசு அறிக்கையாகத் தந்ததை இணையதளம் இப்படிச் சொல்கிறது : “ஆர்.எஸ்.எஸ். இந்துக்களிடையே ஒற்றுமையை வளர்ப்பதுதான் தங்களுடைய நோக்கம் என்று கூறுகிறது. ஆனால், நடைமுறையில் அந்த இயக்கத்தவர் அப்படி நடந்துகொள்ளவில்லை. விரும்பத்தகாத, அதேசமயம் பயங்கரமான சில நடவடிக்கைகளில் அந்த அமைப்பின் உறுப்பினர்கள் தனிப்பட்ட முறையில் ஈடுபட்டுள்ளனர். பொதுச் சொத்துகளுக்குத் தீயிடல், சேதப்படுத்துதல் போன்ற சம்பவங்களில் அவர்களுக்குத் தொடர்பிருப்பது தெரியவருகிறது. அரசுக்கு எதிராகப் பயங்கரவாதச் செயல்பாடுகளில் ஈடுபடுமாறும் ஆயுதங்களைச் சேகரிக்குமாறும் அரசுக்கு எதிரான வெறுப்புணர்வைத் தூண்டிவிடுமாறும் காவல் துறை ராணுவம் ஆகியவற்றுக்குக் கட்டுப்பட மறுக்குமாறும் கூட அவர்கள் கூறுகின்றனர். அவர்களுடைய செயல்பாடுகள் ரகசியமாகவே உள்ளன.” இந்த அறிக்கை காந்தி கொலைக்கு ஆர்.எஸ்.எஸ்.தான் காரணம் என்று சொல்லவில்லை என்றாலும், அந்த இயக்கத்தை அரசின் அறிக்கை தெளிவாகப் படம் பிடித்துக் காட்டியிருக்கிறது.

ஆர்.எஸ்.எஸ். திடீரென்று தோன்றிய அமைப்பன்று. அதன் வேர் இந்து மகா சபையில் இருந்து புறப்படுகிறது.

### இந்து மகாசபா

மதன்மோகன் மாளவியா, லாலா லஜபதிராய் ஆகியோர் தலைமையில் 1915 ஆம் ஆண்டு அமிர்தசரசில் “அகில பாரதிய இந்துமகாசபா “ என்ற அமைப்பை உருவாக்கினார்கள், பார்ப்பனர்கள். இந்த அமைப்பின் தலைவர்களுள் ஒருவரான வினாயக் தாமோதர் சாவர்க்கர் 1920 ஆம் ஆண்டு தலைவராகப் பொறுப்பேற்றுள்ளார்.

1949ஆம் ஆண்டு டிசம்பர் 22 மற்றும் 23 தேதிகளில் அயோத்தி, பாபர் மசூதிக்குள் நள்ளிரவில் நுழைந்து கள்ளத்தனமாக



மதன்மோகன் மாளவியா

பலராமன் சிலையை வைத்தது இந்து மகா சபா. இதற்கு உதவியாக இருந்தவர் அன்றைய அம்மாவட்ட ஆட்சித் தலைவர் கே.கே.நாயர். இதற்குப் பரிசாக 1967 இல் இவர் ஜன சங்கம் கட்சியால் நாடாளுமன்ற உறுப்பினர் ஆக்கப்பட்டார். இதை “வேலைக்கேற்ற கூலி “ என்றார் பேராசிரியர் அருணன்.

### ராஷ்டிரிய சுயம் சேவக்

இந்த அமைப்பில் இருந்து விலகிய கேசவ் பாலிராம் ஹெக்டேவர் 1925ஆம் ஆண்டு செப்டம்பர் 27 ஆம் நாள் ஆர்.எஸ்.எஸ். என்று அழைக்கப்படும் “ராஷ்ட்ரிய சுயம் சேவக் சங் “ என்ற அமைப்பை உருவாக்கினார். இதன் முக்கிய தலைவர்களுள் ஒருவரான மகாதேவ் சதாசிவ கோல்வால்கர் 1940 முதல் 1973 வரை இவ்வமைப்பின் தலைவராக இருந்துள்ளார். இவர் காலத்தில்தான் காந்தி சுடப்பட்டு, அதன் விளைவால் ஆர்.எஸ்.எஸ். என்ற அமைப்பு இந்திய அரசால் தடை செய்யப்பட்டது. இதற்குப் பின்னர் 1975-77 அவசர நிலை அமலில் இருக்கும் போதும், 1992 இல் பாபர் மசூதி இடிக்கப்பட்ட போதும் இந்த அமைப்பு இரண்டு முறை தடை செய்யப்பட்டுள்ளது.

இந்தியா என்பது ஒரே நாடு. அதுவும் வர்ணாசிரமத்தைக் கொண்ட “ராமராஷ்டிரம்” ( ராமராஜ்ஜியம்) என்பது ஆர்.எஸ்.எஸ்- இன் |கொள்கை. இதை அடைய அரசியல் அதிகாரம் தேவை என்ற குறிக்கோளுடன் ஓர் அரசியல் கட்சியை உருவாக்கியது ஆர்.எஸ்.எஸ். அக்கட்சியின் பெயர் “பாரதிய ஜனசங்”.

### பாரதிய ஜனசங்

1951 அக்டோபர் 21 அன்று ஆர்.எஸ்.எஸ். பின்புலத்தில் இக்கட்சியை உருவாக்கிய சியாமா பிரசாத் முகர்ஜி ஆர்.எஸ்.எஸ் - ஆல் தயாரிக்கப்பட்டவர் என்று “ஜன சங்கம்” என்று நூலை எழுதிய கிரைக் பாக்ஸ்டன் கூறுகிறார். இவர் மூன்று ஆண்டுகள் ஜவகர்லால் நேரு அமைச்சரவையில் இருந்தவர், அடல் விகாரி வாஜ்பாய், லால்கிஷன் அத்வானி இருவருக்கும் இவர் குருநாதர் ஆவார்.பாரதிய ஜன சங்கத்தின் உறுப்பினர் படிவத்தின் பின்புறத்தில் ஒற்றை ஆட்சி முறையை உருவாக்கி, அகண்ட பாரதம் அமைப்பது அதன் இலட்சியம் என்று பதிவு செய்யப்பட்டிருந்ததை அருணன் விளக்கியிருக்கிறார்.

ஒரே நாடு, ஒரே தேசம், ஒரே கலாசாரம், அது பாரத்வர்ஷம் என்ற பிரகடனம் ஜன சங்கத்தால் 1952 ஆம் ஆண்டிற்கான தேர்தல் அறிக்கையில் வெளியிடப்பட்டது.

தேவநாகரி, சமஸ்கிருதம் ஆகிய மொழிகளின் வரி, ஒலி வடிவங்களையும், சொல்லாட்சிகளையும் தமிழ் உள்ளிட்ட இந்திய மொழிகள் ஏற்க வேண்டும். அகில இந்திய மொழியாக விரைவில் இந்தி மொழியைக் கொண்டு வரக் கட்சி உழைக்கும் என்ற அன்றைய ஜனசங்கத்தின் அறிக்கையை இன்று பா.ஜ.க ஆட்சி நடைமுறைப்படுத்த முனைப்புக் காட்டுவதைப் பார்க்கிறோம்.

இந்நிலையில் 1977 ஆம் ஆண்டு நாடாளுமன்றப் பொதுத் தேர்தலில் ஜனசங்கம், ஜனதா கட்சியாக உருமாறி நிறுவனக் காங்கிரஸ், பாரதிய லோக்தள், சோசலிஸ்ட் கட்சிகளுடன் இணைந்து போட்டியிட்டு வெற்றி பெற்றது. ஜனதா கட்சியின் பிரதமராக மொரார்ஜி தேசாய், வெளியுறவு அமைச்சராக வாஜ்பாய், செய்தி ஒலிபரப்பு அமைச்சராக அத்வானி ஆகியோர் பதவி ஏற்றுக் கொண்டனர். பின்னர் ஜனதா கட்சி உடைந்து, அதிலிருந்து உருவானது “பாரதிய ஜனதா பார்ட்டி” என்ற (பா.ஜ.க) கட்சி.

### பாரதிய ஜனதா கட்சி

1980 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் வாஜ்பாய் தலைமையில் உருவாக்கப்பட்ட இரண்டாவது பெரிய அரசியல் கட்சியான பா.ஜ.க. வலிமையான ஆர்.எஸ்.எஸ் பின்புலத்தில் இயக்கப்பட்டுக் கொண்டு இருக்கிறது.

தொடர்ச்சி அடுத்த பக்கம்...

தமிழராய் வேர் பிடி! உலகெலாம் கிளை விரி!

# கருஞ்சட்டைத் தமிழர்

## சமூகநீதி நாயகன் ஸ்டாலின்!

சமூக நீதி என்றால் திராவிடம், திராவிடம் என்றால் சமூக நீதி, அது மக்களுக்கானது என்பதை அடுத்தடுத்து நிலை நாட்டி வருகிறார் பெரியாரின் பேரன் முதல்வர் மு.க.ஸ்டாலின்.

ரஷ்யாவை சோசலிச நாடாக ஆக்கியதில் லெனினுக்கு அடுத்து வருபவர் ஸ்டாலின்.

சோசலிசம் என்பதில் சமூக நீதி அடங்கும். தமிழ்நாட்டைச் சமூக நீதி என்ற சோசலிச பாதைக்குக் கொண்டு செல்கிறார் இங்குள்ள ஸ்டாலின். மகனை அறிந்து பெயர் சூட்டினாரே தலைவர் கலைஞர் , என்ன தொலை நோக்குப் பார்வை !

சாதி ஒழிப்பு, பெண்ணடிமைத்தனம் ஒழிந்த பெண் விடுதலை, ஏற்றத் தாழ்வற்ற சமத்துவம், பகுத்தறிவு கல்வி, இட ஒதுக்கீடு, வேலை வாய்ப்பு, பணி உயர்வு உள்ளிட்ட சமூக, அரசியல், பொருளாதார நிலைகளில் சமூகநீதி இருக்கிறதா, அதுகாப்பாற்றப் படுகிறதா என்பது குறித்து மிகத் துல்லியமாகச் சிந்தித்த முதலமைச்சர், “சமூகநீதிக் கண்காணிப்புக் குழு“வை அமைத்து அறிவித்துள்ளார்.

அக்குழுவின் தலைவர் பேராசிரியர் சுப.வீரபாண்டியன். திராவிட இயக்கத் தலைமுறைக்குச் சொந்தக்காரர்.

ஏறத்தாழ நாற்பது ஆண்டுகள் சமூக நீதியை சமரச மற்றக் கொள்கையாகக் கொண்டு பேசிப் போராடி வருபவர், மிக நேர்மையாளர். அவரைக் கண்டெடுத்துப் பொறுப்பைக் கொடுத்துள்ளார் முதல்வர்.


மு.க.ஸ்டாலின்

இவரோடு தனவேல் ஐ.ஏ.எஸ், முனைவர் சுவாமிநாதன் தேவதாஸ், எழுத்தாளர் மனுஷ்யபுத்திரன், ஏ.ஜெய்சன், முனைவர் இராஜேந்திரன், கோ.கருணாநிதி, டாக்டர் சாந்தி ஆகிய தகுதி வாய்ந்தவர்களை உறுப்பினர்களாக நியமித்துள்ளார் முதல்வர்.

உதயசூரியனின் எழுச்சி நாயகன், எதிர்காலத் திராவிடத்தின் தலைமகன் முதல்வர் ஸ்டாலின் அவர்களை ஊர் பாராட்டும், நாடு பாராட்டும், உலக வரலாறும் அவருக்கு இடம் கொடுக்கும்.

முன்பக்கத் தொடர்ச்சி...

1992 டிசம்பர் 6 அன்று அயோத்தியில், அன்றைய முதல்வர் கல்யாண் சிங்கின் கடைக்கண் பார்வையில் ஆர்.எஸ்.எஸ். மற்றும் பா.ஜ.க. வினரால் பாபர் மசூதி இடித்துத் தள்ளப்பட்டது. இது குறித்து மன்மோகன்சிங் விபரான் ஆணைக் குழுவிடம் அளித்த அறிக்கையில் பாபர் மசூதி இடிப்புக்குக் காரணமானவர்கள் வாஜ்பாய், அத்வானி, கல்யாண் சிங் என்று கூறியிருக்கிறார்.

2014 இல் பிரதமராக நரேந்திர மோடி பொறுப்பேற்றதில் இருந்து ஒரு பாசிச ஆதிக்கம் தலைவிரித்தாடிக் கொண்டிருக்கிறது. 282 நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் பெரும்பான்மை அதிகாரத்தில் இருக்கும் பா.ஜ.க, ஏறத்தாழ 70 விழுக்காடு இந்திய நிலப்பரப்பில் தனி ஆட்சியாகவும், அதற்குச் சாதகமான ஆட்சிகளையும் கொண்டிருக்கிறது என்பது கசப்பான உண்மை.


நரேந்திர மோடி

அந்தக் கட்சி தமிழ்நாட்டில் ஊடுருவுகிறது என்றாலும் அதனால் காலூன்ற முடியவில்லை, அதற்கு மக்களும் வழிவிடவில்லை.

காரணம் ஐயா தந்தை பெரியார். அந்தப் பகுத்தறிவுப் புரட்சிக்காரரின் மாபெரும் சித்தாந்தங்களை, சிந்தனைகளை தமிழ் நாட்டில் வலுப்பெறச் செய்த பேரறிஞர் அண்ணா, அரசியல் ஞானி தலைவர் கலைஞர் ஆகியோர்.

இன்று தந்தை பெரியாரின் அறிவாயுதத்தையும், அண்ணாவின் அரசியல் ஞானத்தையும், தலைவர் கலைஞரின் முழுஆற்றலோடு தாமரையிடம் இருந்து தமிழ்நாட்டை மீட்டு இருக்கிறார் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள். அவர் கரத்தைப் பலப்படுத்த தமிழக மக்களுடன் நாம் அவரோடு ஒன்றிணைவோம்.

இலக்கியத்தில் தாமரை மலரட்டும். அரசியலில் சூரியக்கதிரால் வாடி உதிரட்டும்,. அது வளரக்கூடாது !

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்
பொறுப்பாசிரியர்: எழில். இளங்கோவன்
உதவி ஆசிரியர்கள்:
உதயகுமார், வெற்றிச்செல்வன், சாரதாதேவி
வெளியீடு:
திராவிட இயக்கத் தமிழர் பேரவை

இணையதளம்
www.keetru.com, www.karunchattaibooks.com
மின் அஞ்சல்: karunchattai@gmail.com
டுவிட்டர்: suba_vee
தொடர்புக்கு
120 என்.டி. ராமராவ் தெரு, ரங்கராஜபுரம், கோடம்பாக்கம், சென்னை - 600 024,தொலைபேசி: 044-2472 6408

# ஆறு நூல்களின் அறிமுக விழா!


செல்வின்


நாஞ்சில் சம்பத்


செந்தில்நாதன்


'பெல்' ராஜன்


உமா

இனமானப் பேராசிரியர் படிப்பு வட்டமும், கருஞ்சட்டைப் பதிப்பகமும் இணைந்து ஆறு நூல்களின் அறிமுக விழாவை சென்னையில் சிறப்பாக நடத்தியிருக்கின்றன.

22-10-2021 அன்று சென்னை தேனாம்பேட்டையில் அமைந்துள்ள "அன்பகம்" அரங்கில் மாலை 6 மணிக்கு இவ்விழா தொடங்கியது.

இந்த நூல் அறிமுக விழாவிற்குத் திராவிட இயக்கத் தமிழர் பேரவையின் நிதிக்குழுச் செயலாளர் தோழர் செல்வின் செளந்தரராஜன் தலைமை ஏற்றார். இப்படிப்பு வட்ட ஒருங்கிணைப்பாளர்களுள் ஒருவரான தோழர் குண சந்திரசேகர் வரவேற்புரை ஆற்றினார். 'பெல்' ராஜன் நூல்கள் குறித்து ஓர் அறிமுக உரை ஆற்றினார்

முதலில் ஆறு நூல்களில் ஒன்றான தோழர் சுப.வீரபாண்டியன் எழுதிய " நீங்கள் எந்தப் பக்கம் " என்ற நூலை அறிமுகம் செய்யும் முகமாக ஒன்பது கேள்விகளை முன்வைத்து, நிகழ்கால அரசியல் நெடியுடன் நூலை அறிமுகம் செய்தார் எழுத்தாளர் உமா.

அடுத்ததாகப் பேராசிரியர் வெ.சிவப்பிரகாசம் எழுதிய "கருவறை நுழைவும் ஜாதி ஒழிப்பும்" என்ற நூலை அறிமுகம் செய்து வழக்கறிஞர் 'சிகரம்' செந்தில்நாதன், சைவ சித்தாந்தங்களின் அடிப்படையில் ஆற்றிய உரையில் அரசியலும் இருந்தது.

நாஞ்சில் சம்பத் அவரின் சிறப்பான கருத்துரையில் ஆரியம் - திராவிடம், இந்து - தமிழ் இந்து போன்ற முரண் கருத்துகளில் திராவிடத்தின் தொன்மை, பெருமைகளையும், சமஸ்கிருத வேத, மனு, புராணங்கள், தமிழ் பக்தி இலக்கியப் பாடல்களைத் திறம்படச் சொல்லி, நடைமுறை அரசியலை நயமுடனும், நையாண்டியுடனும் எடுத்து வைத்துக் கருத்துரையை நிறைவு செய்தார்.

கருஞ்சட்டைப் பதிப்பக இயக்குநர் "பெல்" ராஜன், நூல்களைப் பதிப்பிக்கும் பணியில் இருக்கும் சிரமங்களைத் தாண்டி நூல்களை வெளியிடும் நேரத்தில் கிடைக்கும் மகிழ்ச்சியை வெளிப்படுத்தி, இதில் அவருக்கு உறுதுணையாக இருக்கும் தோழர் இக்லாஸ் உசேனைப் பாராட்டி நினைவு கூர்ந்து உரையாற்றினார்.

இவ்விழாவிற்கு நூலாசிரியர்களான பொழிலன், வாலாசா வல்லவன், ஆழி செந்தில்நாதன் உள்பட திராவிட இயக்கத் தமிழர் பேரவைத் தோழர்களும், தோழமை அமைப்புத் தோழர்களும் திரண்டு வந்திருந்தனர்.

தோழர் ஜனனி விழாவின் தொகுப்புரையைச் சிறப்பாகச் செய்தார். நிறைவில் படிப்பு வட்ட ஒருங்கிணைப்பாளர்களில் ஒருவரான தோழர் ராஜஸ்ரீ நன்றி கூறி விழாவை நிறைவு செய்தார். ●

## கருஞ்சட்டைப் பதிப்பகம்

### புதிய ஆறு நூல்கள்

1. 'திராவிடம் யாருக்குக் கசக்கும்' — விலை: ரூ.10/-
   - பேராசிரியர் கருணானந்தன்
2. 'கருவறை நுழைவும் ஜாதி ஒழிப்பும்' — விலை: ரூ.130/-
   - பேராசிரியர் வெ.சிவப்பிரகாசம்
3. 'தமிழ்த் தேசிய அரசியலைச் சிதைக்கும் பார்ப்பனியக் கங்காணிகள்' — விலை: ரூ.10/-
   - திரு பொழிலன்
4. 'திராவிடத் தமிழ்த் தேசியம்' — விலை: ரூ.20/-
   - திரு வாலாசா வல்லவன்
5. 'பச்சைத் துரோகம்' — விலை: ரூ.10/-
   - திரு ஆழி செந்தில்நாதன்
6. 'நீங்கள் எந்தப் பக்கம்' — விலை: ரூ.70/-
   - தோழர் சுப.வீரபாண்டியன்

தொடர்புக்கு
120 என்.டி.ராமாராவ் தெரு, ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்
சென்னை - 600 024
தொலைபேசி: 044-2472 6408 / 9940407468
இணையதளம்: www.karunchattaibooks.com

Published By Dravida Iyyakka Tamilar Peravai. Editor Suba. Veerapandian